**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**ந.க.எண். 5186 /ஆ4/2023 நாள் 20.02.2024**

.....

பொருள் : வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் – 2023–2024 ஆண்டில் அனுப்பியுள்ள வினாவங்கி புத்தகங்கள் அனைத்து பள்ளிகளும் வாங்கி பயன்பெற அறிவுறுத்தல் – தொடர்பாக

பார்வை : 1.சென்னை–6, தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர் அவர்களின் கடித .ந.க.எண்.348/அ/2024, நாள்.20.02.2024
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்20.12.2023 மற்றும் 21.01.2024

....

பார்வையில் காணும் சென்னை, தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர் அவர்களின் கடிதத்தில், 2023–2024ம் கல்வியாண்டிற்கான 10ம் வகுப்பு மாதிரி வினாத்தாள் தொகுப்பு, கணித தீர்வுப்புத்தகங்கள், 12ம் வகுப்பு மாதிரி வினாத்தாள் தொகுப்பு புத்தகங்கள், கணித COME புத்தகம், கணிதம் மற்றும் இயற்பியல் தீர்வுபுத்தகங்களை (தமிழ் மற்றும் ஆங்கில வழி) தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்கு தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கப்பட்டு வேலூர் மாவட்டத்தில் கொணவட்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 20.12.2023 முதல் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையில் 24.01.2024–ல் நடைபெற்ற தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு பின்வருமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

**"பெற்றோர் ஆசிரியர் கழகப் புத்தகங்களின் விலை அதிகமாக உள்ளதாக கருதுகின்றார்கள். எனவே, பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கை 500க்கு குறைவாக இருப்பின் 3 செட் புத்தகங்களும், 500க்கு அதிகமாக இருப்பின் 5 செட் புத்தகங்களும் அந்தந்த பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து பெற்று மாணவர்களின் வழிகாட்டுதலுக்கு பயன்படுத்த வேண்டும் என தெரிவித்து சுற்றறிக்கை அனுப்பலாம் என தீர்மானிக்கப்பட்டது."**

தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் 2023–2024ம் ஆண்டு புதிய வெளியீடான 10 மற்றும் 12ம் வகுப்பு மாதிரி வினாத்தாள் மற்றும் தீர்வுப்புத்தகங்களின் வெளியிடப்பட்டுள்ள விவரம் பல பள்ளிகளுக்கு சரியாக சென்று சேரவில்லை என அறிய வருகிறது என்றும், எனவே 24.01.2024 அன்று நடைபெற்ற செயற்குழு தீர்மானத்தின்படி, 500 மாணவர்களுக்கு குறைவாக உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு வினாவங்கி புத்தகங்கள் 3 செட் வீதமும், 500 மாணவர்களுக்கு அதிகமாக உள்ள பள்ளிகளில் 5 செட் புத்தகங்கள் வாங்கி மாணவர்கள் பயன் பெறவும், இதற்குரிய செலவினத் தொகையை அந்தந்த பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

எனவே, அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்காண் அறிவுரையினை பின்பற்றி கொணவட்டம், அரசு மேல்நிலைப் பள்ளியில் வினாவங்கி புத்தகங்களை வாங்கி மாணவர்கள் பயன் பெற ஏதுவாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து உயர் /மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்
மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள். வேலூர் மாவட்டம்.

நகல்:

1. செயலாளர்.
   தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம், சென்னை–6,
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி)
   வேலூர் மாவட்டம், அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.